**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.156/ஆ5/2024, நாள். 22.01.2024**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – பள்ளிக் கல்வி – "தீராக்காதல் திருக்குறள்" என்ற திட்டத்தின் கீழ் திருக்குறள் மாநாடு நடைபெறுதல் சார்பாக – மாவட்ட அளவில் சிறுகதை எழுதுதல் போட்டி மற்றும் குறளோவியம் – ஓவியம் வரைதல் போட்டி மாவட்ட அளவில் நடைபெறுதல் – மாணாக்கர்களை போட்டியில் பங்கேற்க செய்தல் – தொடர்பாக

பார்வை
1. விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.அ4/A117/ஆ5/2023, நாள். 08.01.2024
2. இவ்வலுவலக கடித நாள். 20.01.2024

•••••

பார்வை 1–ல் காணும் கடிதத்திற்கிணங்க, விருதுநகர் மாவட்டத்தில் 02.02.2024 மற்றும் 03.02.2024 ஆகிய நாட்களில் நடைபெறும் "தீராக்காதல் திருக்குறள்" திட்டத்தின் கீழ் நடைபெறும் "திருக்குறள் மாணவர் மாநாடு 2024" சார்பாக சிறப்புப் போட்டிகளாக சிறுகதை எழுதுதல் மற்றும் குறளோவியம் – ஓவியம் வரைதல் போட்டிகள் மாவட்ட அளவில் நடத்தி முதல் மூன்று இடங்களில் வெற்றி பெறும் மாணவர்கள் விவரம் கோரப்பட்டுள்ளது.

சிறுகதை எழுதுதல் மற்றும் குறளோவியம் – ஓவியம் வரைதல் போட்டிகளில் தமிழ் திறனறித் தேர்வு 2023–ல் வெற்றி பெற்ற மாணவர்கள் மற்றும் இதர உயர்நிலை / மேல்நிலை வகுப்பு மாணவர்கள் கலந்து கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மாவட்ட அளவில் சிறுகதை எழுதுதல் மற்றும் குறளோவியம் – ஓவியம் வரைதல் போட்டிகள் கீழ்காணும் படி நடைபெறவுள்ளது.

**நாள்– 24.01.2024 (புதன்கிழமை)**
**நேரம் – காலை 10.00 மணி**
**இடம் – ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி,**
**வேலூர்.**

1. சிறுகதை எழுதுதல் போட்டி மூன்று பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
2. சிறுகதைகள் – திருக்குறள் போற்றிய விழுமியங்கள் என்ற கருத்தை மையப்படுத்தி கதைக்கரு அமைதல் வேண்டும். (தனிப்பட்ட தலைப்புகள் இதற்கு இல்லை மாணவர்களின் கற்பனைக்குரியது)
3. ஓவியம் – திருக்குறள் போற்றிய விழுமியங்கள் என்ற கருத்தை மையப்படுத்தி ஓவியக்கரு அமைத்தல் வேண்டும்.

4. மேற்காண் போட்டியில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு திருக்குறள் மாணவர் மாநாட்டு நிறைவு விழாவில் பரிசுகள் வழங்கப்படும் எனவும் வெற்றி பெற்ற மாணவர்கள் விருப்பம் இருப்பின் மாநாட்டில் கலந்துக் கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, நடைபெறும் மாவட்ட அளவிலான சிறுகதை எழுதுதல் மற்றும் குறளோவியம் – ஓவியம் வரைதல் போட்டியில் ஒரு போட்டிக்கு இரண்டு மாணவர்கள் வீதம் ஒரு பள்ளிக்கு 4 மாணவர்கள் கலந்துக்கொள்ள வேண்டும். எனவே, அனைத்து உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் (அரசு / தனியார் / நிதியுதவி) 9ஆம் வகுப்பு முதல் 12ம் வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் இப்போட்டிகளில் கலந்துக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு (அரசு / தனியார் / நிதியுதவி) தலைமையாசிரியர்கள் / தாளாளர்கள் / முதல்வர்களுக்கு தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்,
அனைத்து அரசு /நிதியுதவி / தனியார் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. மாவட்டக் கல்வி அலுவலர்
   (இடைநிலைக் கல்வி), வேலூர் மாவட்டம்.
   தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்படுகிறது. )
2. மாவட்டக் கல்வி அலுவலர்
   (தனியார் பள்ளிகள்), வேலூர் மாவட்டம்.
   தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு சுற்றறிக்கை அனுப்ப தெரிவிக்கப்படுகிறது.)
3. தலைமையாசிரியர்,
   ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, வேலூர்
   (போட்டிகள் நடைபெறுவதற்கு போதிய வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். )

(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)